


- வாழ்வோம்

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட ஆறு மாதங்களில், `சட்டம்-ஒழுங்கு சீர்கேடு', `திறனற்ற நிர்வாகம்', `பொருளாதார மந்தம்' என ஒட்டுமொத்தமாக, தமிழ்நாட்டை அதலபாதாள வீழ்ச்சிக்குக் கொண்டுசெல்கிறது, த.வெ.க. அரசு கழக ஆட்சிக்காலத்தில் எட்டப்பட்ட சாதனைகளையெல்லாம் பாழடித்துக்கொண்டிருக்கிறார்களே.. எனக் கேள்வி எழுப்பினால், அவைகளை அறிவாலயப் பணத்தில் கட்டினார்களா? என்று ஆணவமாகப் பேசுகிறது, திறனற்ற ஆளுங்கட்சி. இந்த ஆணவத்துக்குப் பின்னால், வலதுசாரிகளின் அரசியல் சூழ்ச்சியை அறிய வேண்டும் எனத் தனது எக்ஸ் தளத்தில் கருத்துப் பகிர்ந்துள்ளார், சு.அருண் உதயசூரியன்.

ஏனெனில், கழகம் பிற்போக்குவாதத்தை எதிர்த்தது!

``இப்படிப் பேசுபவர்கள்... காமராஜர் தனது சொந்த பணத்தில் அணைகளைக் கட்டினாரா என்ற கேள்வியை எங்கேயாவது கேட்டுப் பார்த்துள்ளீர்களா? சொந்த பணத்தில், பள்ளிகளைக் கட்டினாரா என்று கேள்வி கேட்பதில்லை. காமராஜர், தனது சொந்த பணத்தில் மதிய உணவு வழங்கினாரா என்று கேள்வி எழுப்புவதில்லை.

எம்.ஜி.ஆர். தனது சொந்த பணத்தில் சத்துணவு வழங்கினாரா என்ற கேள்வியை எங்கேயாவது கேட்டுப் பார்த்துள்ளீர்களா? `முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்' என்பதை, `காமராஜர் காலை உணவுத் திட்டம்' என்று பெயர் வைத்தாரே ஜோசப் விஜய்! அது என்ன காமராஜர் வீட்டுப் பணத்தில் இருந்து வழங்கப்படுகிறதா!?

ஏன், கலைஞரின் திட்டங்களை வரிசைப்படுத்தும்போது மட்டும், கலைஞர் வீட்டுப் பணத்தில் செய்தாரா, அறிவாலயப் பணத்தில் கட்டினாரா என்று கேட்கின்றனர்!

காரணம், தி.மு.க.வும் கலைஞரும் எதிர்த்து அரசியல் செய்தது.. ஆதிக்க சக்திகளை! பிற்போக்குவாத கும்பலை! அந்த ஆதிக்க சக்திகளான பிற்போக்குவாத கும்பலுக்கு,

1. நூலகம் என்றாலே எரிச்சல் வரும்.
2. படிப்பை எல்லோருக்கும் வழங்கினால், எரிச்சல் வரும்.
3. உணவை எல்லோருக்கும் வழங்கினால், எரிச்சல் வரும்.
4. வாழ்விடத்தை எல்லோருக்கும் வழங்கினால், எரிச்சல் வரும்.
5. எல்லோருக்கும் சமமான பயண வசதியைக் கொடுத்தால், எரிச்சல் வரும்.
6. எல்லோரும் சமம் என்றாலே, எரிச்சல் வரும்.
7. ஆதிக்க பிற்போக்குவாத கும்பலை எதிர்த்துக் கேள்வி கேட்டால், எரிச்சல் வரும்.

இவைகளை கலைஞர் செய்ததால், தி.மு.க. செய்வதால், தி.மு.க. மீது தமது முழு வன்மத்தையும் காண்பிக்கின்றனர்'' என்கிறது அந்தப் பதிவு.

ஃப்ளாஷ்பேக்



தாயகம் கவி



இந்தி ஆதிக்க எதிர்ப்புக் கருத்தரங்கம்!

1986-ஆம் ஆண்டு, 'இந்தி எதிர்ப்புப் போராட்டம்', அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு முழுவதும் எழுச்சிமிக்க போராட்டமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. கழகத்தின் போராட்டக்களத்தில், மாணவர்கள் அணி அணியாகத் திரண்டனர். அப்போது, தென் சென்னை மாவட்ட மாணவர் அணி அமைப்பாளராக இருந்த நான், தலைவரை கல்லூரிக்கு அழைத்து, இந்தி ஆதிக்க எதிர்ப்புக் கருத்தரங்கம் நடத்தியதுடன், மாணவர் அணி வளர்ச்சி நிதியாக ரூ.11,000 வழங்கினேன். தலைவர் ரூ.11 இலட்சத்தை பேரறிஞர் அண்ணாவிடம் வழங்கியதைப் போல, நான் ரூ.11 ஆயிரம் வழங்கினேன். தலைவர் கலைஞரின் போராட்டமே அன்றைய இந்தித் திணிப்பைப் பின்வாங்கவைத்தது. தலைவர் பற்றவைத்த ஆதிக்க இந்தி எதிர்ப்பு நெருப்பு, என்றும் ஓயாது.

- தாயகம் கவி, கழகத் துணை அமைப்புச் செயலாளர், சென்னை.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

நடந்தவை எல்லாம், நாசமாகிக்கொண்டிருக்கின்றன!



08



'காக்கா முட்டை' என்ற திரைப்படத்தின் ஒரு காட்சியில், பீட்சாவுக்கு ஆசைப்படும் ஏழைச் சிறுவர்கள், ஒரு கட்டத்தில் அது கிடைத்தவுடன், 'என்னடா பீட்சா நல்லாவே இல்லை, இதுக்கு ஆயா சுட்டுக்குடுத்த தோசையே நல்லா இருந்துச்சு' என்பார்கள். அந்த மனநிலையில்தான் இன்றைக்கு ஒட்டுமொத்த தமிழ்நாடும் இருக்கிறது.

தமிழ்நாட்டு மக்கள், திரைக்கவர்ச்சியின் மோகத்தால், திராவிட மாடல் அரசுக்கு மாற்றாக ஒரு புதிய அரசைத் தேர்வு செய்தார்கள். அந்தப் புதிய ஆட்சிக்குத் தேனிலவுக்காலம் முடிந்துவிட்டது, நாட்கள் நகர்ந்துவிட்டன. ஆனால், ஆட்சி அசைந்தபாடில்லை; ஆட்சியாளர்கள் செயல்படத் தொடங்கவும் இல்லை. ஆறு மாதங்களுக்கு முன்பு, இந்தப் புதிய ஆட்சிக்கு ஏன் வாக்களித்தீர்கள் என்று யாரிடம் கேட்டாலும், 'ஒரு மாற்றம் வேண்டாமா..? அதற்குத்தான் வாக்களித் தோம்' என்றார்கள். 'நீங்கள் எதிர்பார்த்த நல்ல மாற்றம் வந்துவிட்டதா?' என இப்போது அதே நபர்களிடத்தில் கேட்டால், அவர்கள் முகத்தில் ஏமாற்றமே தெரிகிறது.

சட்டம் ஒழுங்கு, பெண்கள் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, விலைவாசி உயர்வு, தொழில் வளர்ச்சி, முன்னோடித் திட்டங் களை வகுத்தல் என எதிலுமே புதிய ஆட்சியின் பங்களிப்பு சிறப்புக்குரியதாக இல்லை, சீரழிப்பதாகவே உள்ளது என மக்கள் ஆறே மாதங்களில் உணரத் தொடங்கியிருக்கின்றனர். இது மாற்றமாக இருக்காது, பெரும் ஏமாற்றமாகத்தான் இருக்கும் என்று தொலைநோக்கோடு சிந்தித்தவர்களின் எண்ணம் சரியானதுதான் என்பதை மாற்றம் என்று நம்பி ஏமாந்த வர்களும் புரிந்துகொள்ளத் தொடங்கி விட்டனர்.

இந்த இருதரப்புக்குமான உரையாடலை பேரறிஞர் அண்ணா, நாடகமாகப் படைத்தால் எப்படி இருக்கும்? அப்படியே இருக்கிறது; 'நடந்ததுதான் நடக்கிறது' நாடகம்.

09.06.1946 அன்று, 'திராவிட நாடு' இதழில் வெளியான இந்நாடகம், அப்போது புதிதாக அமைந்திருந்த காங்கிரஸ் அரசின் செயல்பாடுகளை விமர்சனப் பார்வையுடன் அணுகுகிறது.

இரண்டாம் உலகப் போரில் பிரிட்டன் நிலைப்பாட்டை எதிர்த்து, 1939-ஆம் ஆண்டு, சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் அரசு ராஜினாமா செய்தது. அதன் பிறகு, ஏழு ஆண்டுகள் பிரிட்டன் கவர்னரின் நேரடி ஆட்சி சென்னை மாகாணத்தில் நடைபெற்ற நிலையில்.. தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெற்றதால், எந்த மாற்றமும் வரவில்லை என்பதை விளக்கும் விதமாக, அண்ணா இந்த நாடகத்தை இயற்றினார்.

உலகப் போர் காரணமாக, பிரிட்டன் நேரடி ஆட்சியில் உணவுப் பொருள்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டு, அரிசி அளந்து (ரேஷன்) வழங்கப்பட்டது. காங்கிரஸ் ஆட்சி வந்த பிறகும் இந்தப் பஞ்சம் தீராமல், ரேஷன் முறையில் வழங்கப்பட்டுவந்த அரிசியின் அளவு மேலும் குறைக்கப்படும் நிலை உருவானது. கொள்ளை இலாபக்காரர்களும் உணவுப் பண்டங்களைப் பதுக்கியவர்களும் தொடர்ந்து எவ்விதத் தடையுமின்றிச் செயல்பட்டனர்.

விலைவாசிக்கு ஏற்ப கூலி உயராததால், உழைக்கும் மக்கள் மிகுந்த அதிருப்தியடைந் தனர். ஆனால், அதே விலைவாசி உயர்வைக் காரணம் காட்டி, அமைச்சர் களின் ஊதியத்தை 500 ரூபாயில் இருந்து 1,500 ரூபாயாக உயர்த்த சட்டம் இயற்றப்பட்டது. தொழிலாளர்கள் பல்வேறு விதமாக ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டனர். 'தடியடி', 'கண்ணீர்ப்புகை குண்டு', 'துப்பாக்கிப் பிரயோகம்' போன்ற பிரிட்டன் நேரடி அரசின் அதே ஒடுக்குமுறைகள், புதிய ஆட்சியிலும் தொடர்ந்தன.

இப்படி, காங்கிரஸ் ஆட்சியில் எதுவுமே மாறவில்லை; ஆட்சி மட்டும்தான் மாறியிருக்கிறது, ஆட்சி மாற்றத்தைக் கொண்டாடியவர்கள் பெரும் ஏமாற்றம் மட்டுமே அடைந்திருக் கிறார்கள் என்பதை ஒரு எளிய மனிதனும், நிதானமாகச் சிந்திக்கும் மற்றொரு மனிதனும் உரையாடுவது போல நையாண்டி வடிவில் இந்த நாடகம் எழுதப்பட்டுள்ளது.

ராஜா எப்படி இருக்கிறார்?

முதல் நபர்: பார்த்த முகமாக இருக்கிறதே! ஓ..! கவனம் வருகிறது. நீதானே அப்பா, ராஜாவின் மகுடாபிஷேக வைபவத்தை எனக்குச் சொன்ன ஆசாமி?

இரண்டாம் நபர்: ஆமாம் நானேதான்.

முதல் நபர்: புது ராஜா?

இரண்டாம் நபர்: சௌக்கியமாக இருக்கிறார்.

முதல் நபர்: ராஜாக்கள் சௌக்கிய மாகத்தானே இருப்பார்கள். அதைக் கேட்கவில்லையப்பா. புது ராஜா வந்த பிறகு, ராஜரீகம் சுகமாக இருக்கிறதல்லவா? என்று கேட்டேன்!

(தான் ஆதரித்த ராஜாவின் ஆட்சியில், நாட்டில் நிலவும் கொடுமைகள் பன்மடங்கு அதிகரித்துவிட்டதை, வேதனையோடும் விரக்தியோடும் பகிர்வார், இரண்டாம் நபர்,)

'அட, கஷ்டகாலமே! நீ என்னமோ மகுடாபிஷேகத்தன்று, புதுராஜா காலத்திலே சந்தோஷம் கரைபுரண்டு ஓடும் என்றாயே!' என முதல் நபர் கேட்க, 'ஐயா, என் வேதனையை அதிகப்படுத்த வேண்டாம்' என மனம் வெதும்பிப் பதிலளிப்பார், இரண்டாம் நபர்.

முதல் நபர்: *போப்பா! நல்ல மந்திரி, நல்ல ராஜரீகம். இதையே தானே முன்பு இருந்த ராஜாங்கத்திலே அந்த அதிகாரியும் சொன்னான். அதையே இவர்களும் சொல்லுவது என்றால், என்ன பிரயோஜனம். இப்படி ஒவ்வொன்றுக்கும் பழைய பேச்சையே பேசுவது என்றால் இதற்குப் புதிதாக இவர்கள் வருவானேன்? என்னதான் செய்தார்கள் இவர்கள், ராஜரீகம் ஏற்று?*

இரண்டாம் நபர்: *ராஜாங்கம் நடத்து கிறார்கள்!*

முதல் நபர்: *அதுதானா... அவ்வளவு தானா! இருக்கும் கஷ்டம் போகக் காணோம், பழைய முறை மாறக் காணோம், பாட்டாளி துயர் குறையக் காணோம், மாமூல் ஓடக் காணோம், புது ராஜாங்கம் வந்தால் ஆனந்தம் பொங்கும் என்று அன்று கூத்தாடினாயே!*

இரண்டாம் நபர்: *ஆடினதால் வந்த அலுப்புதானப்பா, கண்ட பலன்.*

முதல் நபர்: *சேச்சே! எனக்குக் கோப மாகவும் இருக்கிறது, வெட்கமாகவும் இருக்கிறது. நான் போய்விட்டு இன்னும் கொஞ்ச நாள் பொறுத்தாவது வருகிறேன்; அப்போதாவது புது ராஜாங்கம் புதிய முறையில் வேலைசெய்து, பழைய கஷ்டத்தைப் போக்கி, புதிய, இன்பமான வாழ்வை மக்களுக்குத் தருகிறதா என்று பார்ப்போம்' என நாடகத்தை முடித்திருப்பார் அண்ணா.*

அன்றைய காங்கிரஸ் ஆட்சியை நோக்கி அண்ணா முன்வைத்த கேள்விகள் அனைத்தும் இன்றைக்கு த.வெ.க. ஆட்சிக்கும் அப்படியே பொருந்துகின்றன. ஆனால், தலைப்பில் மட்டும் சிறு திருத்தம் தேவைப்படுகிறது. 'நடந்ததுதான் நடக்கிறது' என்ற தலைப்பை 'நடந்தவை எல்லாம் நாசமாகிக்கொண்டிருக்கிறது' என்று மாற்றிவிட்டால், த.வெ.க. ஆட்சிக்கும் முழுப் பொருத்தமாகிவிடும்.

...தொடரும்

ர.பிரகாசு

தெரிந்து கொள்வோம்

1963

அசைக்க முடியாத கோட்டை!

-ஆம் ஆண்டு, பிரிவினைவாத தடுப்புச் சட்டம் தொடர்பாக விவாதங்கள் நடந்த நேரம். தஞ்சை மாவட்டத்தில் கழக நிகழ்ச்சிகளுக்குச் சென்றிருந்தார், பேரறிஞர் அண்ணா. கும்பகோணத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அண்ணா பேசியதைத் திரித்து, `தி.மு.கழகத்தைக் கலைத்துவிடுவதாக அண்ணா கூறினார்' எனப் பத்திரிகைகள் எழுதின. அந்தச் செய்திகளைக் கண்டு கடும் கோபம் கொண்ட அண்ணா, ``தி.மு.கழகத்தை நான் நினைத்தால்கூட கலைக்க முடியாது?'' என்று காட்டமாக அறிக்கை வெளியிட்டார்.



RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034
and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900